# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 41 — 1973 ජනවාරි 05 වැනි සිකුරාදා — 1973 01.05

41 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு சனவரி மாதம் 05 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (II அ)—விளம்பரங்கள்

( ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன )



| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. | 1 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 7 |



## பதவிகள் — வெற்றிடம்

*" ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "*

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பது அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்குவிதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச்சம்பளத்தில் இல்லாதவர்களையொழித்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத வீதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(iii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்த வேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அரசசேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு, நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவோர் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்தே அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

---

**முக்கிய அறிவித்தல்**

ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரஜையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், இயணக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பன வற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களுக்கும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந்நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோவெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்க வேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இது விடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப்பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியன சம்பளத்துடன் அடங்கியது.

---

### ஸ்ரீ லங்கா தரைப்படையில் உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள்

ஸ்ரீலங்கா தரைப்படையின் தொழிற் சேவைகள், இலங்கை பொறியியலாளர்கள் பிரிவில் அரண் காவல் பொறியியலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் நிரந்தர அரசாணை அமர்வு செய்யப்பட்டு இரண்டாவது லெப்டினனட் பதவியில் அமர்த்தப்படுவர்.

3. (அ) சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பகாரருக்கு கீழ்க் காணப்படும் வகையிலான சம்பளமும் சகாயப் பணமும் வழங்கப்படும். லெப்டினனட்-கேர்னல் பதவி வரையிலான சம்பள விகிதம் பின்வருமாறு :—

இரண்டாவது லெப்டினனட் : வருடம் ஒன்றிற்கு ரூபா 7,140—(மாதம் ஒன்றிற்கு ரூபா 595).

லெப்டினனட் : வருடம் ஒன்றிற்கு ரூபா 7,500—5×180—ரூபா 8,400 வரை (மாதம் ஒன்றிற்கு ரூபா 625—5×15—700 வரை)

கப்டன் : வருடம் ஒன்றிற்கு ரூபா 9,240—8×180—ரூபா 10,680 வரை (மாதம் ஒன்றிற்கு ரூபா 770—8×15—ரூபா 890 வரை)

மேஜர் : வருடம் ஒன்றிற்கு ரூபா 11,400—8×240—ரூபா 13,320 வரை. (மாதம் ஒன்றிற்கு ரூபா 950—8×20—ரூபா 1,110 வரை)

லெப்டினனட் கேர்னல்: வருடம் ஒன்றிற்கு ரூபா 15,000—7×360—ரூபா 17,520 வரை (மாதம் ஒன்றிற்கு ரூபா 1,250—7×30—ரூபா 1,460 வரை).

(ஆ) மணமான அதிகாரிகளின் பணிக்கொடை—

மாதமொன்றிற்கு ரூபா 575 ம்—ரூபா 600 க்கு குறையவும் மாதம்—ரூபா 80.00.

மாதமொன்றிற்கு ரூபா 600 ம்—ரூபா 625 க்கு குறையவும் மாதம்—ரூபா 82.50.

மாதமொன்றிற்கு ரூபா 625 ம்—ரூபா 650 க்கு குறையவும் மாதம்—ரூபா 85.00.

மாதமொன்றிற்கு ரூபா 650 ம்—ரூபா 675 க்கு குறையவும் மாதம்—ரூபா 87.50.

மாதமொன்றிற்கு ரூபா 675 ம்—ரூபா 700 க்கு குறையவும் மாதம்—ரூபா 90.00.

மாதமொன்றிற்கு ரூபா 700 ம்—ரூபா 725 க்கு குறையவும் மாதம்—ரூபா 92.50.

மாதமொன்றிற்கு ரூபா 725 ம்—ரூபா 750 க்கு குறையவும் மாதம்—ரூபா 95.00.

மாதமொன்றிற்கு ரூபா 750 ம்—ரூபா 775 க்கு குறையவும் மாதம்—ரூபா 97.50.

மாதமொன்றிற்கு ரூபா 775 ம்—அதற்குக் கூடவும் மாதம்—ரூபா 100.00.

வேறு ஏனைய பணிக்கொடைகள்—

(i) தொடக்க அணியடுக்கு பணிக்கொடை, ரூபா 1,000

(ii) கோல அணி பேணல் பணிக்கொடை, மாதம் ரூபா 25.

(iii) வெளியில் வசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட மணமான மணமாகாத அதிகாரிகளுக்கு, மாதமொன்றிற்கு சேவையாளர் பணிக்கொடை மாதம் ரூபா 75.

(iv) பிரிந்திருக்கைப்படி (1) தொடர்ச்சியாக 14 நாட்களுக்கு அதிகப்படியாகாத காலவரையறைக்கு, வழமையான கடமைகளின் காரணமாக, பாசறையினுள் வசிக்கும்படி, மணமான அதிகாரிகளுக்கு கட்டளையிட்டிருந்தால், நாளொன்றிற்கு ரூபா 1.50.
(2) அவசர நிலைமைக்காகவோ அல்லது விசேட கடமைகள் காரணமாகவோ, தொடர்ச்சியாக 14 நாட்களுக்கு அதிகமான காலவரையறைக்கு பாசறையினுள் வசிக்கும்படி மணமான அதிகாரிகளுக்கு கட்டளையிட்டிருந்தால், நாளொன்றிற்கு ரூபா 2.

(v) பிரயாண அத்துடன் இணைந்த பணிக்கொடைகள் அரசாங்க அதிகாரிகளுக்கு கொடுபடும்படி.

(இ) உத்தியோகத்தர்கள் கீழ்க்காணப்படும் ஒழுங்குவிதிகளின் படியும், அவரவர்களின் சம்பளம், சேவைக்கேற்பவும் ஆளப்படுவர் :—

(i) 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ம் திகதிய 12,395 இலக்கத்தை உடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1961 ம் ஆண்டின் தரைப்படை வேதனச் சட்டக்கோவையின் பிரகாரம் காலத்திற்கு காலம் செய்யப்படும் திருத்தங்களுக்குமிணங்க.

(ii) 1949 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 10 ம் திகதிய 10,028 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான ஒழுங்கு விதிகளுக்கு இணங்க காலத்திற்குக் காலம் செய்யப்படும் திருத்தங்களுக்குமிணங்க.

(iii) 1961 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 28 ம் திகதிய 12,680 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1961 ம் ஆண்டின் தரைப்படை வேதனச் சட்டக் கோவை உபகாரச் சம்பள பணிக்கொடைக் கோவைக்கும் காலத்திற்குக் காலம் செய்யப்படும் திருத்தங்களுக்குமிணங்க. மற்றும் ஏனைய விபரங்களுக்கு கொழும்பு, தரைப்படைத் தலைமை நிலையத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

4. விண்ணப்பகாரர்கள் கீழ்க்காணப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்:—

(அ) தேசிய இனம்—இலங்கைப் பிரசையாயிருத்தல் வேண்டும்.

(ஆ) வயது—விண்ணப்பகாரர்கள் 73.02.05 திகதியன்று 28 வயதுக்குக் கூடாதவராயிருத்தல் வேண்டும்.

(இ) கல்வித் தகைமையும் உயர்தொழில் தகைமையும்—விண்ணப்பகாரர்கள் கீழ்க்காணப்படுபவற்றில் ஏதாவது ஒன்றில் தகைமை உடையவராயிருத்தல் வேண்டும் :—

(i) நன்கு மதிக்கப்பெற்ற பல்கலைக் கழகமொன்றின் சிவில் பொறியியல் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்; அல்லது

(ii) இலண்டன் சிவில் பொறியியலாளர்கள் நிறுவனத்தால் நடாத்தப்பட்ட I வது II வது பகுதிகளான பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்; அல்லது

(iii) நன்கு மதிக்கப்பெற்ற பல்கலைக் கழகமொன்றில், சிவில் பொறியியல் பழைய பிரமாணத்தின் கீழான I ஆம் பகுதிய (பிரிவு அ, ஆ) அல்லது புதிய பிரமாணத்தின் கீழான II ஆம் பகுதிய பட்டப் பரீட்சையில் சித்தியெய்தியுள்ளோராயும், பட்டக் கல்விப் பயிற்சி நெறியை மூற்றுறுவித்து பழைய பிரமாணத்தின் கீழான இறுதி II ஆம் பகுதிக்கு (சிவில்) அல்லது புதிய பிரமாணத்தின் கீழான இறுதி III ஆம் பகுதிக்குத் (சிவில்) தோற்றத் தகுதியுடையோராயும் இருத்தல் வேண்டும்; அல்லது

(iv) இலண்டன் சிவில் பொறியியலாளர்கள் நிறுவனத்தின் I ஆம் பகுதிப் (பிரிவு அ, ஆ,) பரீட்சையில் அல்லது பொறியியல் நிறுவனங்கள் பேரவையின் I ஆம் பகுதிப் பரீட்சையில் அல்லது இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனத்தின் I ஆம் பகுதிப் பரீட்சையில் சித்தியெய்தியுள்ளோராயும், அத்துடன் கூடுதலாக ஓர் பயிற்சி நெறியை முற்றுறுவித்து மேற்போந்த பரீட்சைகளில் ஒன்றின் II ஆம் பகுதிக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டோராயும், அரசாங்க திணைக்களமொன்றில் அல்லது பிரசித்தி பெற்ற பொறியியல் தாபனம் ஒன்றில் மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத காலத்திற்கு நுண்தொழிற்றுறையில் செயல்முறை அனுபவம் உடையோராயும் இருத்தல் வேண்டும்.

(v) பொது வேலைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட முழுப் பரீட்சைகளையும் முடித்தவராயும் உதவி எஞ்சினியர் பதவிக்கு தகுதியுடையவராயும் இருத்தல் வேண்டும்; அல்லது

(vi) கல்வி அமைச்சினால் அல்லது இலங்கை கனிஷ்ட நுண்தொழில் கல்லூரியினால் நடாத்தப்பட்ட (சிவில்) கனிஷ்ட நுண்தொழில் அதிகாரிகளின் பயிற்சி நெறியை அல்லது நீர்ப்பாசன இலாகாவால் நடாத்தப்பட்ட நுண்தொழில் உதவியாளர் பயிற்சிநெறியை சித்தியெய்தி அரசாங்க இலாகா ஒன்றில் அல்லது பிரசித்தி பெற்ற பொறியியலாளர்கள் ஸ்தாபனம் ஒன்றில் மூன்று வருட காலத்திற்குக் குறையாத காலவரையறையில் நுண்தொழிற்றுறையில் சேவை செய்த அனுபவம் இருத்தல் வேண்டும்.

(ஈ) வைத்தியத் தகைமைகள்—விண்ணப்பகாரர்கள் தரைப்படையினால் வேண்டப்படும் வைத்தியத் தகைமைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தகைமையுடையவர்களாயிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பங்கள் யாவும் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்தினைப் போன்று எழுதப்பட்டு 05.02.73 திகதியன்று நண்பகல் 12 மணிக்கு அல்லது அதற்கு முன் தரைப்படைத் தலைமை நிலையத்தில் கிடைக்கக் கூடியதாக, தரைப்படைத் தலைமை நிலையம், தபால் பெட்டி இலக்கம் 553, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடிதவுறையில் "விண்ணப்பங்கள்—அரண்காவல் பொறியியலாளர்" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முடிவு திகதிக்குப் பின் இத்தலைமை நிலையத்தில் கிடைக்கும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பப் பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது.

6. ஏற்கனவே அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தமது திணைக்களத் தலைவருக்கூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும். இந்த விண்ணப்பகாரர்கள் தெரிவு செய்யப்படின் அவர்களைச் சேவையில் இருந்து விடுவிக்கப்படும் எனக் காட்டும் சான்றிதழ் ஒன்றும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். தரைப்படையின் பணிக்கொடைச் சேவைக்குச் சேர்த்துக் கொள்வதற்கு தம் திணைக்களத்தினால், அத்திணைக்களத் தலைவரினால் கொடுக்கப்பட்ட சான்றிதழ் அனுப்பப்படல் வேண்டும். இவ்வாறு செய்யப்படாவிடின் தரைப்படை பணிக்கொடைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது.

7. விண்ணப்பங்களுடன் இவைகளின் பிரதிகள் இணைத்தனுப்புதல் வேண்டும்:—

(அ) பிறப்புச் சான்றிதழ்.

(ஆ) கல்வித் தகைமைகளையும்/நுண்தொழில் தகைமைகளையும் காட்டும் உயர்தரச் சான்றிதழ்.

(இ) விண்ணப்பகாரர்களுடன் பரிச்சயமுடைய பொறுப்பு வாய்ந்தவர்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட குறைந்த பட்சம் இரண்டு நற்சான்றுப் பத்திரங்கள்.

8. மேலே கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பகாரர்களில் இருந்து தொடக்கத் தெரிவு செய்யப்படும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரர்கள் இதன்பின் இறுதித் தெரிவு. தெரிவு செய்யப்பட்டவர்களில் இருந்து பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் ஆக்கப்பட்ட தேர்வுச் சபை ஒன்றினால் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படும். நேர்முகப் பரீட்சைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பகாரர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகளின் இடம், நேரம், காலம், திகதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சைகள் கொழும்பில் நடாத்தப்படும். இத்தொடர்பில் ஏற்படும் எவ்விதமான பிரயாணச் செலவோ அல்லது பிற செலவுகளோ அரசாங்கத்தினால் வழங்கப்பட மாட்டாது.

9. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் 1956 ஆம் ஆண்டின் 33 ம் இலக்க அரசாங்க மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கென விசேடமாக அரசாங்க மொழியதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஏற்கனவே செய்யப்பட்ட விதிகளுக்கும் அல்லது இனிமேல் செய்யப்படும் விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

10. பதவி உபகாரச் சம்பள உரித்துடையது அல்ல. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் ஒரு சகாய நிதிக்குத் தமது உதவு தொகையாகத் தமது திரட்டிய சம்பளத்தின் ஆறு சதவீதத்தைக் கழித்தற்கு எழுத்துருவிலான தமது சம்மதத்தைக் கொடுக்குமாறு வேண்டப்படுவர். ஒரு சேவை உபகாரச் சம்பளத்தை அல்லது பணிக்கொடையை வழங்கப்படுதலைக் குறிக்கும் 1961 ஆம் ஆண்டின் தரைப்படை உபகாரச் சம்பளங்களும், பணிக்கொடைகளும பற்றிய சட்டக் கோவையிலுள்ள ஒழுங்கு விதிகள் ஏற்புடையனவாகா.

எம். ஏ. ஜயவீர,
பிரிகேடியர்,
தரைப்படைத் தளபதிக்காக.

கொழும்பு,
1972.12.22.

ஸ்ரீலங்கா தரைப்படையில் தொழிற் சேவைகள், இலங்கை பொறியியலாளர்கள் பிரிவில் அரண்காவல் பொறியியலாளர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் (தடித்த எழுத்துக்களில்) :————.

2. தேசிய இனம்: (பாரம்பரையான இலங்கை பிரசையா அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கைப் பிரசையா என்பதைக் குறிப்பிடுக. பதிவு செய்யப்பட்ட பிரசையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடவும்) :————.

3. முகவரி :————.

அலுவலக விலாசம் :————.

வீட்டு விலாசம் :————.

4. பிறந்த திகதி :————. 05.02.1973 திகதியன்று வயது :— ————வருடம் ———— மாதம் ———— நாள்

5. முழுப்பெயர், பிறந்த இடம், தற்போதைய முகவரி ஆகியன :————.

தாயின் :————.

தந்தையின் :————.

6. நீர் விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ? :————

7. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உடற்பயிற்சி விளையாட்டுகள் சம்பந்தமாக நீர் பெற்ற தனிச் சிறப்புகள் :————.

8. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உமக்குரிய சிறப்பாகப் பெற்ற பிற செயல்கள் :————.

9. படைக்கலந் தாங்கு சேவைகளில், இலங்கை தொண்டர் படை, இலங்கை சாரணர் படை, இலங்கை பயிலுநர் சிறப்பணி, முதலிய தொண்டர் நிறுவனங்களில் சேவை செய்திருப்பின் அவற்றின் விபரங்கள் :————.

10. இந்நியமனம் சம்பந்தமாக உமக்குரிய வேறு விசேட தகைமைகளைக் குறிப்பிடுக :————.

11. இதற்குமுன் படைக்கலந் தாங்கு சேவைகளில் ஏதாவது ஒன்றிற்கு விண்ணப்பம் செய்திருப்பின் அதன் முடிவு யாதெனக் குறிப்பிடுக :————.

12. உமது பாடசாலை அல்லது சர்வகலாசாலை விபரங்களைத் தருக :————.

பாடசாலையின் அல்லது சர்வகலாசாலையின் பெயர் :——
சேர்ந்த திகதி :————.
விலகிய திகதி :————.

சித்தியடைந்துள்ள பொது/பொது உயர்தொழிற் பரீட்சைகள் :————.

13. பாடசாலையை அல்லது சர்வகலாசாலையை விட்டு விலகிய பின் நீர் செய்த தொழில் விபரங்களைக் கீழே தருக :——
வேலை கொள்வோரின் பெயர் :————.
செய்த தொழில் :————.
சேவை செய்த காலம் :————தொடக்கம்————வரை.

14. குணச் சான்றுப்பத்திரங்கள் வழங்கியோரின் பெயர்களும் முகவரிகளும் :————.

மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் அனைத்தும் எனது அறிவிற்கெட்டியவரையில் அவை சரியானவை என்றும் உண்மையானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————————
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————

1-29—05.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 41

---

## நெல் சந்தைப்படுத்தல் சபை

### உள்ளகக் கணக்குப் பரிசோதகர் பதவி

மேற் குறிப்பிட்டுள்ள பதவிக்கு, பின்வரும் தகைமைகளைக் கொண்ட அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் பத்திரங்கள், கீழே கையொப்பமிட்டவரின் முகவரிக்கு கல்விச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், குணச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் 1973 ம் வருடம் ஜனவரி மாதம் 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக, பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "உள்ளகக் கணக்குப் பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பம்" என்று குறிக்கப்பட வேண்டும்.

1. தகைமைகள் :—

(அ) ஐந்து வருட அனுபவம் உள்ள தத்துவம் பெற்ற கணக்காளர் ; அல்லது

(ஆ) உள்ளகக் கணக்காய்வில் அனுபவம் வாய்ந்த, இரண்டாம் வகுப்பைச் சேர்ந்த அரசாங்கக் கணக்காளர் ; அல்லது

(இ) 5 வருட அனுபவம் வாய்ந்த, முதலாம் தர கணக்குப் பரிசோதனை அத்தியட்சகர்.

2. சம்பளத்திட்டம் :—

ரூபா 1,500—10×50—ரூபா 2,000. தெரிவு செய்யப்பட்ட அபேட்சகருக்கு அவருடைய தகைமைகளுக்கும் அனுபவங்களுக்கும் ஏற்ப சம்பளத் திட்டத்தின் ஒரு படியில் வழங்கப்படலாம்.

3. வயது :—

விண்ணப்பத் திகதி அன்று 50 வயதிற்கு மேற்படாமல் இருக்க வேண்டும். சபைகள்/கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசாங்க இலாக்காக்களில் உள்ள ஊழியர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேல் எல்லை அமையாது.

4. பொது நியதிகள் :—

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்போதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவோர் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(இ) சபைகள்/கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசாங்க இலாகாக்களில் உள்ள ஊழியர்களிடமிருந்துவரும் விண்ணப்பங்கள் முறையே அவர்களினுடைய தலைவர்கள் ஊடாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
நெல் சந்தைப்படுத்தல் சபை.

இல. 5, எலிபாங்கு வீதி,
கொழும்பு 5,
1972 டிசம்பர் 20 ம் திகதி.

1-6—05.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 41

---

## இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை

### பதவி வெற்றிடங்கள்

இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பதவிநிலைத் தரம் V இல் பதிப்பு உதவியாளர்/மொழிபெயர்ப்பாளர் (தமிழ்) பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள் : விண்ணப்பக்காரர்கள் பட்டதாரிகளாயும் தமிழ் வெளியீடுகளைப் பதிப்பித்தலிலும் கட்டுரைகள் எழுதுவதிலும் ஐந்து வருடங்களுக்குக் குறையாத அனுபவமும் அத்துடன் கைத்தொழிற் பொருளியல், வர்த்தகம் ஆகிய துறைகள் சம்பந்தமான சிங்கள/தமிழ் மொழிபெயர்ப்பிலும் அல்லது ஆங்கில/தமிழ் மொழிபெயர்ப்பிலும் அனுபவம் உடையவர்களாயும் இருத்தல் வேண்டும்.

வயது : விண்ணப்பக்காரர்கள், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதியில் 45 வயதுக்குக் கூடியோராய் இருத்தலாகாது.

சம்பள அளவுத்திட்டம் : மாத மொன்றிற்கு ரூ. 720—7×40—5×50—ரூ. 1250 (எல்லாம் உட்பட).

விண்ணப்பங்கள் : இவ்வலுவலகத்திற்கு நேரடியாக வந்து அல்லது 9½"×4½" அளவிலான, சொந்த முகவரியும் முத்திரையுமிட்ட கடித உறை ஒன்றை அனுப்பிப் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப்படிவத்தில் அனுப்பப்படல் வேண்டும். அவை, இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவருக்கு 1973 சனவரி 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக பதிவு அஞ்சலில் அனுப்பப்படல் வேண்டும்.

அஞ்சலில் இழக்கப்படும் அல்லது முடிவுத் திகதிக்குப்பின் இவ்வலுவலகத்திற்கு வந்துசேரும் விண்ணப்பங்களுக்கு இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை பொறுப்பாகாது.

அரசாங்க சேவையாளர், நியதிச்சட்ட சபைகள், யாக்கங்களின் ஊழியர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள், தெரிவு செய்யப்படும் பட்சத்தில் விண்ணப்பக்காரர்கள் விடுதலை செய்யப்படுவரென அந்நிறுவனத் தலைவர்கள் மேலொப்பமிட்டாலன்றிக் கவனிக்கப்படமாட்டா.

பொது முகாமையாளர்,
இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச்சபை.

16, கிறகறீஸ் வீதி,
கொழும்பு 7.

1-34—05.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 41

## ஸ்ரீ லங்கா கடற்படை

### புனைகையர் தவிர்ந்த இனைகளில் மாலுமிகளைச் சேர்த்தல்

ஸ்ரீ லங்கா கடற்படையின் நிரந்தர கடற்படையில் புனைகையர் தவிர்ந்த இனைகளுக்கு கடலோடிகளாக, எரியூட்டும் பொறியியலாளராக, செய்தி அறிவிப்பாளராக, எழுத்த 'களாக, களஞ்சிய உதவியாளராக, படுக்கைப் பிணிப் பணியாளராக, மின்பொறியியலாளராக, சமையற்காரர்களாக, கப்பல் மேற்பார்வையாளராக, இசையாளராக, சாரதிகளாக மாலுமிகளைச் சேர்த்துக்கொள்வதற்கு வெற்றிடங்கள் உள.

**2.** கீழே கொடுக்கப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்களும் நிபந்தனைகளைத் திருப்திப்படுத்தக்கூடியவர்களுமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள கோரப்படுகின்றன.

**3. (அ) பொது நிபந்தனைகள்.**—ஓர் அபேட்சகர்—

**(i)** இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

**(ii)** சிங்கள, தமிழ் அல்லது ஆங்கில மொழி மூலம் எழாம் தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**(iii)** நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**(iv)** பின்வரும் ஆகக் குறைந்த உடல் தகைமைகளையாவது உடையவராக இருத்தல் வேண்டும்.

(அ) உயரம்—5 அடி 4 அங்குலம்

(ஆ) நிறை—105 இருத்தல்

(இ) மார்பு அளவு—32 அங்குலம் (விரிவடையாத நிலை)

**(v)** வயது எல்லை.—1973 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 05 ஆம் திகதி 18 வயதிற்குக் குறையாமலும் 21 வயதிற்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும்.

**(vi)** வைத்திய தராதரம் கடற்படைத் தளபதியினால் விதித்தபடி இருத்தல் வேண்டும்.

**(ஆ) விசேட நிபந்தனைகள்.**—மேலே உள்ள 3(அ) பந்தியில் குறிப்பிடப் பட்டிருக்கும் பொது நிபந்தனைகளைவிடக் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மேலதிக தகைமைகளை உடைய அபேட்சகர்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் இனைகளுக்கு விண்ணப்பித்தால், அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**எரியூட்டும் பொறியியலாளர்/மின் பொறியியலாளர்**

**(i)** தொழில்நுட்பக் கல்லூரிகளில், வர்த்தக பாடசாலைகளில் பெற்ற பயிற்சி அல்லது நன்கு நிறுவப்பட்ட கைத்தொழில் நிலையங்களில் பெற்ற தொழிற் பயிற்சி.

**(ii)** க.பொ.த. (சாதாரணதர)ப் பத்திரப் பரீட்சையில் கணிதத்தில் பெற்ற ஒரு சித்தி.

**செய்தி அறிவிப்பாளர்**

ஆங்கிலம் வாசிக்கவும் எழுதவும் ஆற்றல்.

**எழுத்தர்/களஞ்சிய உதவியாளர்**

**(i)** தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணக்கு வைத்தல், கணக்கியல் என்பவற்றில் அறிவு/அனுபவம்.

**(ii)** க. பொ. த. (சாதாரணதர)ப் பத்திரப் பரீட்சையில் வர்த்தக பாடங்களும் ஆங்கிலமும்.

**படுக்கைப் பிணிப் பணியாளர்**

**(i)** க. பொ. த. (சாதாரணதர)ப் பத்திரப் பரீட்சையில் இரசாயனவியல், பௌதிகவியல், ஆங்கிலம், கணிதம் என்பவற்றில் சித்திகள்.

**(ii)** மருந்து கலப்பதில் அனுபவம்/தொழிற் பயிற்சி.

**சமையற்காரர்**

**(i)** விடுதிப் பாடசாலையில் பயிற்சி.

**(ii)** மேல்நாட்டு/கீழ்நாட்டு சமையல்முறை அனுபவம்.

**கப்பல் மேற்பார்வையாளர்**

**(i)** விடுதிப் பாடசாலையில் பயிற்சி.

**(ii)** கைப்பணியாள், காத்திருக்குமாள், மதுபானச் சாலையாள் என்பவராகக் கடமைபுரிந்த அனுபவம்.

**சாரதி**

பார வாகனங்களைச் செலுத்துவதில் திறமையான சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**இசையாளர்**

**(i)** எந்த இசைக் கருவியையும் (மேல் நாட்டு அல்லது கீழ் நாட்டு) இயக்கி, அல்லது பாடிச் செயற்படுத்தும் திறமை.

**(ii)** கிளாறினெற், சக்ஷபோன், ரொம்போன், புளூற் (மேற்கு நாட்டு), பியானோபோர்ட், கிறரார் அல்லது கண்டி வாத்தியம் என்பவற்றில் வினைத்திறமை.

**குறிப்பு.**—குறித்த ஒரு நியமனத்திற்கு வேண்டப்பட்ட தொழில்நுட்ப அல்லது விசேட அறிவைக் கொண்டுள்ள ஓர் அபேட்சகருக்கு வயது எல்லை 45 ஆக நீடிக்கப்படும். அத்துடன்/அல்லது கேட்கப்பட்ட கல்வித் தகைமைகள் தளர்த்தப்படும். இது விசேடமாக எரியூட்டும் பொறியியலாளர்/மின் பொறியியலாளர், கப்பல் மேற்பார்வையாளர், சமையற்காரர், சாரதி என்னும் இனைகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்குப் பொருந்தும்.

**4 ஆட்சேர்த்தல் முறை.**—தேர்வுபெறும் அபேட்சகர்கள் மேலே காட்டப்பட்டுள்ள இனைகளுக்கு நியமிக்கப்படுவார்கள். அக்கிளைகளில் அவர்களுடைய உறுதிப்படுத்தலானது ஆட்சேர்த்தல் பயிற்சி நெறியின் திறனைப் பொறுத்திருக்கும். தேர்வு பெறுவோர் அத்தகைய பயிற்சி நெறியின் நிறைவைப் பொறுத்து, கிளைமாற்றத்திற்கு அல்லது கடற்படைத் தளபதியின் தற்றுணிபின்படி நீக்கத்திற்கு ஆளாவார்கள்.

**5 சேவை நிபந்தனைகள்.**—சேவை நிபந்தனைகள், கடலோடிகளின் ஆட்திரட்டல் நிரலினையும், 1950 ஆம் ஆண்டின் சேவை ஒழுங்கு விதிகளையும் ; (1950, திசெம்பர் 9 ஆம் திகதிய 10,187 ஆம் இலக்க இலங்கை அரசாங்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்டது), அதற்குப் பின்னர் காலத்திற்குக் காலம் மேற்சொல்லப்பட்ட ஒழுங்குவிதிகளில் செய்யப்படும் மாற்றங்களையும் உள்ளடக்குவதுடன் அவைகள் ஆட் சேர்த்தல் திகதியிலிருந்து நடைமுறையிலிருந்தும் வரும்.

**6 ஈடுபடுத்தல் காலம்.**—(அ) தேர்வு பெறும் ஓர் அபேட்சகர் முதல் முறை 12 வருட காலம் ஒன்றிற்கு ஈடுபடுத்தப்படுவர். இக்காலவெல்லைக்குள் அவருடைய சேவை திருப்திகரமாகக் காணப்படின் அவருடைய சேவை 33 வருடங்களுக்குக் கூடாத ஒரு மொத்த காலத்திற்கு நீடிக்கப்படும். பொதுவாக அவர் சகாய நிதிச் சலுகையைப் பெற 22 வருட காலத்திற்கு மட்டும் சேவை செய்ய வேண்டும்.

(ஆ) ஓர் அபேட்சகரைச் சேர்க்கும் திகதிக்கு முன்னர் மேற்கூறப்பட்ட திட்டத்துக்கென ஏற்படுத்தப்பட்ட ஒரு திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுமோனால் இந்த 22 வருட காலமானது ஈடுபடுத்தல்/திரும்ப ஈடுபடுத்தல் என்ற வகையில் முறையே 5 வருடங்கள், 7 வருடங்கள், 10 வருடங்கள் என்று மூன்று காலப் பகுதிகளாகப் பிரிக்கப்படும். தேர்வு பெறும் அபேட்சகர் ஒருவர் இத்தகைய சந்தர்ப்பங்களில் முதல் முறையாக 5 வருட காலம் ஒன்றிற்கு ஈடுபடுத்தப்படுவார்.

(இ) ஒவ்வொரு முறையும் ஈடுபடுத்தல்/திரும்ப ஈடுபடுத்தலானது முரண்பட்ட நிலைமை எதுவும் நிகழாவிட்டால் மாலுமி 55 வயது அடையும்போது சேவையிலிருந்து நிறுத்தப்படுவார்.

**7. (அ) சம்பள விகிதங்களும் படிகளும்.**—ஒரு கடலோ[illegible] நிலையான வரிசைப் பதவிக்கான திரட்டிய சம்பள அளவு பின்வருமாறு அமையும் :—

சேர்தல் காலம்—ஆண்டுக்கு ரூபா 2,700.
சாதாரண கடலோடி. ரூபா 2,800—15 × 60—ரூபா 3,780.
திறமையான கடலோடி—ரூபா 3,060—15 × 60—ரூபா 3,960.
தலையாய கடலோடி—ரூபா 3,660—15 × 72—ரூபா 4,740.
சிறு திற அலுவலர்—ரூபா 4,620—10 × 90—ரூபா 5,520.
பிரதான சிறு திற அலுவலர்—ரூபா 5,010—10 × 90—ரூபா 5,910.
அதி பிரதான சிறு திற அலுவலர்—ரூபா 5,640—10 × 144—ரூபா 7,080.

(ஆ) பயிற்றப்பட்ட கடலோடிகள் சேவையில் சிறப்புப் பெற்றவராகக் கருதப்படுபவர், சிறு உயர்வுச் சம்பளத்திற்குத் தகுதியுடையவராவர்.

(இ) விவாகமான கடலோடி ஒருவருக்கு விவாகப்படி ஒன்று வழங்கப்படும். அத்தகைய விகிதம் அரசாங்க சேவையில் பெறும் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் ஏற்றவாறு அவருக்குப் பொருந்தும்.

**8.** பின்வரும் விதிகள் ஆட்திரட்டல் விண்ணப்பங்களுக்குக் கையாளப்பட வேண்டும் :—

(அ) இவ்வறிவித்தலின் முடிவில் தோன்றும் மாதிரி விண்ணப்பப் படிவம் போல் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) கடற்படைத் தளபதி, கடற்படைத் தலைமை அலுவலகம், த. பெ. இல. 593, கொழும்பு 1 என்னும் முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்படுதல் வேண்டும். தபால் உறையின் இடப்பக்க மேல் மூலையில் " மாலுமிகளைச் சேர்த்தல் " என்று குறிப்பிடுவதுடன் 1973 ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 05 ஆம் திகதி பகல் 12 மணிக்கு முன்னர் கடற்படைத் தலைமை அலுவலகத்தை வந்தடையுமாறு அனுப்பப்படுதலும் வேண்டும்.

(இ) அரசாங்க ஊழியர்களின் விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவருக்கு ஊடாக அனுப்பப்படுவதுடன் விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்பட்டால் விடுவிக்கப்படுவார் என்று குறிப்பிடப்பட்ட திணைக்களத் தலைவரின் கடிதம் ஒன்றும் அத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றை இணைத்தல் வேண்டும் :

(i) விண்ணப்பதாரரின் நல்லொழுக்கத்தையும் ஆட்சேர்த்தலுக்குத் தகுதி என்பதையும் குறிப்பிட்டெழுதிப் பகுதிக் கிராம சேவையாளரிடமிருந்து பெற்றுள்ள ஒரு சான்றிதழ்.

(ii) விண்ணப்பதாரர் கடைசிப் பிறந்த தினத்திலன்றோ அதற்குப் பின்னரோ எடுத்த புகைப்படம் ஒன்று. அத்துடன் அதன் மறுபக்கம் கிராம சேவையாளரினால் அத்தாட்சிப்படுத்தப்படவும் வேண்டும்.

(iii) விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவிப்பதற்காகச் சொந்த முகவரி எழுதப்பட்ட தபால் உறை ஒன்று.

9. தேர்வு பெற்று நிரந்தரக் கடற்படையில் சேர்க்கப்படும் அபேட்சகர் அரசகரும மொழிக் கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு, 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரச கரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும், வேறு ஒழுங்குவிதிகளுக்கும், சேர்தல் திகதியில் உள்ளவாறான அது போன்ற கட்டளைகளுக்கு அல்லது அறிவுறுத்துரைகளுக்கும் அல்லது அதன் பின்னர் காலத்திற்குக் காலம் அளிக்கப்படும் அது போன்ற நிபந்தனைகளுக்கும் இணங்குவார் என்பதை எழுத்து மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

10. முன்னைய படைச் சேவையாளர் ஒருவர் இவ்வெற்றிடங்களுக்கு உரிமை கோருவதானால் மேலே கொடுக்கப்பட்டுள்ள பொது நிபந்தனைகளுக்கு மேலதிகமாகப் பினவருவனவற்றைக் கட்டாயம் நிருபிகக வேண்டும் :—

(அ) ஸ்ரீ லங்கா படைச் சேவையில், பிரித்தானிய பொதுநலப் படையில் அல்லது இலங்கைப் பாதுகாப்புப் படையில் ஒரு வருடத்திற்குக் குறையாத சேவையுடையவர் என்றும் ;

(ஆ) படைச் சேவையிலிருந்து விலகும்போது அவரது படைச்சேவை ஒழுக்கம் " மிக நன்று " என்னும் தரத்தினைப் பெற்றவர் என்றும் ;

(இ) மொத்தத் திரட்டல் சேவையில் உண்மையான எண்ணிக்கை ஆண்டுகள், மாதங்கள், நாட்கள் எவை என்றும் ;

நிருபிக்க வேண்டும்.

11. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஓர் அபேட்சகர் பின்வரும் மூலச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் அல்லது தலைமைப் பதிவுகாரரினால் வழங்கப்பட்ட விசேட சான்றிதழ் (விண்ணப்பதாரரின் பிறப்புப் பதிவு பதியப் பெருதிருந்தால்).

குறிப்பு.—ஞானஸ்நானச் சான்றிதழ்கள், ஒழுங்குவிதிமுறைக்கென உதவி பெறும் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள், சாதகக் குறிப்புகள் முதலியன வயதை நிருபிக்க ஏற்றுககொள்ளப்படமாட்டா.

